# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, VELLORE @ RANIPET

**SC. No. 51 /2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW22 |
| Name | : | குலசேகரன் |
| Father's / Husband's Name | : | வெங்கடேசன் |
| Age | : | 63 |
| Religion | : | இந்து |
| Calling | : | காவல்துறை ஓய்வு |
| Caste | : | இந்து வாணியர் |
| Village | : | திருவண்ணாமலை |
| Date | : | 08.06.2022 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கடைசியாக திருவண்ணாமலை நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 2016ம் ஆண்டு பணிஓய்வு பெற்றேன். நான் கடந்த 16.10.2015ம் தேதி மதியம் 12.30 மணிக்கு அலுவலில் இருந்தபோது திருவண்ணாமலை நகரம் ரமணா நகரை சேர்ந்த ஆறுமுகம் த/பெ முனுசாமி என்பவர் தன்னுடைய மூத்தமகள் லாவண்யா என்பவர் 15.10.2015ம் தேதி இரவு 12.30 மணிக்கு வீட்டிலிருந்து காணாமல் போய்விட்டதாகவும் எனவே அவரை கண்டுபிடித்து தருமாறு கொடுத்த புகார் மனுவை பெற்று திருவண்ணாமலை நகர காவல் நிலைய சி எஸ் ஆர் 346/2015 என்று பதிவு செய்தேன். மேற்படி மனு சம்மந்தமாக விசாரணை செய்த மேற்படி லாவண்யாவை நிலையம் கொண்டுவந்து விசாரித்தபோது தனக்கு வீட்டில் திருமண ஏற்பாடு செய்வதாகவும் தனக்கு திருமணம் செய்துகொள்வதில் விருப்பம் இல்லை என்றும் கல்லூரியில் படித்து வருவதாகவும் தனக்கு திருமண ஏற்பாடு செய்தது

பிடிக்காததால் அவருடைய அத்தை வீட்டிற்கு சென்றிருந்ததாக கூறினார். அதன் பின்னர் அவர் பெற்றோர்கள் தனது மகளை தொடர்ந்து படிக்க வைப்பதாகவும் அவர் விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்து வைக்க மாட்டோம் என்று எழுதிக்கொடுத்ததன் பேரில் புகார்மனுவை முடித்து வைக்கப்பட்டது. ஆறுமுகம் கொடுத்த புகாரின் பேரில் நான் வழங்கிய மனு ரசீது மற்றும் அதன் பேரில் நான் விசாரித்து பதிவு செய்த வாக்குமூலம் **அ.சா.ஆ.11** ஆகும். இது சம்மந்தமாக வாலாஜா காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH